[1970 மார்ச் 6

சொல்லியும் அதே நிலையில்தான் இருக்கிறது. இதுபோன்ற நிலை இங்கு மட்டும் அல்லாமல் பல இடங்களில் இதே போன்று பள்ளிக் கூடக் கட்டடங்கள் முற்றுப் பெறுமலே பல ஆண்டுகளாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் அவசரமாகக் கட்டித் தர வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா? இதை எடுத்த காண்ட்ராக்டரால் தாமதம் என்றால் அந்த காண்ட்ராக்டரை ரத்து செய்துவிட்டு புதிதாக காண்ட்ராக்டுக்கு விட்டு கட்டடத்தைத் துரிதமாக கட்டி முடிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதிலே தேவை யற்ற அளவுக்கு காலதாமதம் ஏற்பட்டு விட்டது என்பதைத் தலைமைப் பொறியரே ஒப்புக் கொண்டு வருத்தம் தெரிவித் திருக்கிறார். நாலைந்து ஆண்டுகளாக நின்று கொண்டிருக்கும் நிலையில் அதை விரைவாகக் கட்டி முடிக்கப்பட வேண்டு மென்பதற்கான முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன. விரைவில் அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படும்.

திரு. நா. காசிராமன்: நான்கு ஆண்டுகள் காலதாமதமானதன் காரணமாக இந்தக் கட்டடத்திற்கான செலவும் அதிகமாகக் கூடும். இந்தக் காலதாமதத்திற்குக் காரணமான காண்டிராக்டர் களிடமிருந்து இந்த நஷ்டத்தைப் பெற அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தக் கால தாமதத்திற்கு யார் காரணம் என்று அறிந்துகொள்ள முடியவில்லை. காண்டிராக்டர் காரணமா, அல்லது அதிகாரிகள் காரணமா அல்லது வேறு காரணமா என்று முடிவு செய்யப்படவில்லை. வழித்தடங்கள் சரியாக இல்லை என்று காரணம் காட்டி யிருக்கிறார்கள். அது முழுவதும் பொருத்தமான காரணம் அல்ல. மழைக் காலத்தில் வேண்டுமானால் போக்குவரத்து தடைப் படலாம். மற்றக் காலங்களில் வேலை நடைபெற்றிருக்கலாம். இது 1963–64-லேயே திட்டமிடப்பட்டுள்ள ஒன்று. விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். காலதாமதத்திற்கு யார் காரணம் என்று கண்டுபிடித்து அதற்கு மேல் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசுக் கல்லூரி முதல்வர்கள்.

*234 வினா.—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

வகுப்புகளுக்குச் சென்று பாடம் நடத்தாது, அலுவலகக் காரியங்களை மட்டும் பார்த்துக்கொண்டு வருகின்ற அரசினர் கல்லூரி முதல்வர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஒருவருமில்லை.

1970 மார்ச் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 235, 236 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன. கேள்வி எண் 237 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

New Rice Mill in Pandravedu village

* 238 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) whether applications are pending now before the Food Department, Government of Tamil Nadu for starting new rice mill in Pandravedu village in Palliput sub-taluk in Chingleput district ;

(b) whether any petition was sent by the villagers of Pandravedu objecting to the grant of rice mill permit very near the elementary school in the said village in September, October 1969; and

(c) if so, the particulars thereof and the steps taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம். இரண்டு மனுக்கள் வரப்பெற்று, அவைகளின் மீது முடிவெடுக்கப்பட்டது.

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : பொதுவாக ரைஸ் மில்களுக்கு லைசென்ஸ்கள் கொடுக்கிற நேரத்தில் பக்கத்தில் வீடுகள் இருக்கின்றனவா அல்லது பள்ளிகள் இருக்கின்றனவா அல்லது புதிய கட்டடங்கள் இருக்கின்றனவா என்று பார்த்து அந்தப் பக்கத்திலுள்ள இடங்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று சுற்றறிக்கையை அரசாங்கம் அந்த அதிகாரிகளுக்கு அனுப்புமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதுபோன்ற ரைஸ் மில்களுக்கு லைசென்ஸ் வழங்கும்போது மாவட்ட சுகாதார அதிகாரியுடைய அத்தாட்சி பெற்றதற்குப் பிறகுதான் வழங்கப் படுகிறது.

திரு. கே. விநாயகம் : இந்தக் குறிப்பிட்ட ரைஸ் மில் என் தொகுதியில் இருப்பதால் அரசாங்கம் எடுத்த முடிவு சரியான முடிவுதான் என்பது அரசாங்கத்திற்கு நன்கு தெரியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நன்றி. தெரிந்துதான் அப்படி முடிவு எடுத்தது.

Study team of Indian Institute of Foreign Trade

* 239 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any study team of the Indian Institute of Foreign Trade visited this State about the 20th June 1969;